நாள்- 10.08.2023

Case No. OS.222/2014 (PW1 cross )

PW.1 – சண்முகம் – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதிகள் 5 பேர்கள் என்னுடைய சகோதரர்கள்தான். என் அப்பா பெயர் முத்துஉடையார் . என் அம்மாவின் பெயர் அண்ணபூரணி. இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் என் அம்மா அண்ணபூரணி இறந்துவிட்டார். என் தங்கையின் பெயர் பாஞ்சாளை. என்னுடைய சகோதரியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள நிலத்தின் சர்வே எண்ணில் 2.8 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி சண்முகம் என்மீது அசல் வழக்கு 458/2013 என் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி என்மீது வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் நான் பிரதிவாதிமீது வழக்கு தாக்கல் செய்தேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)